

# தொடக்க ஆண்டுகளுக்கான கல்வி மற்றும் சிறார் கவனிப்பு உரிமைத் தகுதிகள்

Warwickshire County Council

# உள்ளடக்கம்:


| | |
|---|---|
| தகுதியுள்ள பணிபுரியும் குடும்பங்களுக்கு 30 மணிநேர சிறார் கவனிப்பு | 1 |
| கூடுதல் ஆதரவுகள் பெறும் தகுதியுள்ள குடும்பங்களுக்கு 2HELP சிறார் கவனிப்பு நிதி | 4 |
| எல்லா குடும்பங்களுக்கும் அனைவருக்குமான 15 மணிநேர சிறார் கவனிப்பு | 6 |
| கூடுதல் உரிமைத் தகுதிகள் | 8 |
| அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் | 10 |
| தொடர்புகள் மற்றும் மேலதிகத் தகவல்கள் | 12 |
| சைல்ட்மைண்டராக ஆகுங்கள் | 13 |




## தகுதியுள்ள பணிபுரியும் குடும்பங்களுக்கு 30 மணிநேர சிறார் கவனிப்பு



9 மாதம் முதல் 4 வயது வரையிலான குழந்தைகளுக்கு

- வாரத்திற்கு 30 மணிநேரம் வரை
- ஆண்டுக்கு 38 வாரங்கள்

### பின்வரும் சூழ்நிலைகளில், பணிபுரியும் பெற்றோருக்கு செப்டம்பர் 2025-இலிருந்து வாரத்திற்கு 30 மணிநேரம் பெற உரிமை இருக்கலாம்:

- ➢ நீங்கள் இரு பெற்றோர் உள்ள ஒரு குடும்பமாக இருந்து, இருவரும் பணிபுரிந்து, ஒவ்வொருவரும் வாரத்திற்கு 16 மணிநேரங்களுக்கு நிகரான தேசிய குறைந்தபட்ச அல்லது வாழ்தல் ஊதியத்தைப் பெறுபவர் என்றால்
- ➢ நீங்கள் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு £100,000-ஐவிடக் குறைவாக ஈட்டுகிறீர்கள் என்றால்

### அல்லது

- ➢ நீங்கள் ஒரு தனித்த தாயாக/தந்தையாக இருந்து, வாரத்திற்கு 16 மணிநேரங்களுக்கு நிகரான தேசிய குறைந்தபட்ச அல்லது வாழ்தல் ஊதியத்தைப் பெறுபவர் என்றால்
- ➢ ஆண்டுக்கு £100,000-ஐவிடக் குறைவாக ஈட்டுகிறீர்கள் என்றால்

## புலம்பெயர்வு நிலை:

நிதிபெற்ற சிறார் கவனிப்பைப் பெறத் தகுதியுள்ளவராக இருக்க, உங்களுக்கு ஒரு தேசிய காப்பீட்டு எண்ணும் (National Insurance Number) பின்வருவனவற்றில் குறைந்தது ஒன்றும் இருக்க வேண்டும்:

- ➢ பிரிட்டிஷ் அல்லது ஐரிஷ் குடியுரிமை
- ➢ குடியமர்ந்த அல்லது முன்குடியமர்ந்த நிலை, அல்லது விண்ணப்பித்துவிட்டு ஒரு முடிவுக்காகக் காத்திருக்கிறீர்கள்
- ➢ உங்கள் யு.கே. வசிப்பு அட்டையில் (UK Residence Card) காட்டப்பட்டுள்ளபடி பொது நிதியை அணுகும் அனுமதி

உங்களுக்கு ஓர் உறவாளர் இருந்தால் அவருக்கும் ஒரு தேசிய காப்பீட்டு எண் இருக்க வேண்டும்.

## உரிமைத் தகுதி:

பணிபுரியும் பெற்றோர் நிதிபெற்ற உரிமைத் தகுதி (Working Parent funded entitlement) ஆண்டுக்கு அதிகபட்சம் 1140 மணிநேரத்திற்கானது. இது வாரம் 30 மணிநேரத்திற்கு நிகரான அளவில் குறைந்தது 38 வாரங்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் குறைந்த மணிநேரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த உரிமைத் தகுதியை ஓர் ஆண்டில் இன்னும் அதிக வாரங்களுக்கு நீட்டிக்க முடியும். உங்கள் தொடக்க ஆண்டுகள் வழங்குநர் (Early Years Provider) நிதிபெற்ற உரிமைத் தகுதிகளை எப்படி வழங்குகிறார் என்பதை அறிய அவரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## என் குழந்தை எப்போது தகுதி பெறும்?

குழந்தைகளுக்கு வழக்கமாக 9 மாதங்கள் நிரம்பியதும் பள்ளிக் கல்விக்காலத்தின் தொடக்கத்தில் ஒரு நிதிபெற்ற உரிமைத் தகுதி இடம் இருக்கும்.

| இம்மாதங்களுக்கு இடையே 9 மாதங்கள் நிரம்பும் குழந்தைகளுக்கு: | நிதிபெற்ற இடங்கள் இதிலிருந்து தொடங்கும்: |
|---|---|
| 1 ஜனவரி – 31 மார்ச் | 9 மாதங்கள் நிரம்பிய தேதியை அடுத்து கோடைக் கல்விக்காலத்தின் (Summer Term) (ஏப்ரல் 1 அன்று அல்லது அதன் பின்பு) தொடக்கம் |
| 1 ஏப்ரல் – 31 ஆகஸ்ட் | 9 மாதங்கள் நிரம்பிய தேதியை அடுத்து இலையுதிர்காலக் கல்விக்காலத்தின் (Autumn Term) (செப்டம்பர் 1 அன்று அல்லது அதன் பின்பு) தொடக்கம் |
| 1 செப்டம்பர் – 31 டிசம்பர் | 9 மாதங்கள் நிரம்பிய தேதியை அடுத்து வசந்தகாலக் கல்விக்காலத்தின் (Spring Term) (ஜனவரி 1 அன்று அல்லது அதன் பின்பு) தொடக்கம் |

**HMRC அளித்த ஒரு முறையான தகுதிக் குறியீடு தேவைப்படும்.**



## விண்ணப்பிக்கும் முறை:

பணிபுரியும் பெற்றோர் தங்கள் தகுதிக் குறியீட்டுக்கு HMRC மூலம் இங்கு இணையவழி விண்ணப்பிக்க வேண்டும்: www.beststartinlife.gov.uk

அல்லது QR குறியீட்டின் மூலம்:

- **இடம் தொடங்குவதற்கு முன்பு நீங்கள் கல்விக்காலத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்**
- நீங்கள் இதில் வெற்றியடைந்தால், HMRC உங்கள் பாதுகாப்பான கணக்கின் மூலம் உங்களுக்கு ஒரு தகுதிக் குறியீட்டை வழங்கும். உங்கள் கணக்கை நீங்கள் உங்கள் தொடக்க ஆண்டுகள் வழங்குநருக்குத் தர வேண்டும்
- உங்கள் குறியீடு சரியானதா என்று உங்கள் தொடக்க ஆண்டுகள் வழங்குநர் சோதிக்கும். பின்பு நீங்கள் உங்கள் இடத்தை அடுத்து வரும் கல்விக்காலத்திற்கு முன்பதிவு செய்யலாம். தகுதிக் குறியீட்டில் பின்வரும் தேதிகளில் அல்லது அவற்றுக்கு முன்பு சரியான தொடக்கத் தேதி இருக்க வேண்டும்:
    - இலையுதிர்காலக் கல்விக்காலம்: ஆகஸ்ட் 31 அன்று அல்லது அதற்கு முந்தைய சரியான தொடக்கத் தேதி
    - வசந்தகாலக் கல்விக்காலம்: டிசம்பர் 31 அன்று அல்லது அதற்கு முந்தைய சரியான தொடக்கத் தேதி
    - கோடைகாலக் கல்விக்காலம்: மார்ச் 31 அன்று அல்லது அதற்கு முந்தைய சரியான தொடக்கத் தேதி
- உங்கள் பாதுகாப்பான கணக்கில் புகுபதிகை செய்து 3 மாதங்களுக்கு ஒருமுறை உங்கள் தகுதியை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும். இறுதித் தேதிக்கு 4 வாரங்களுக்கு முன்பு HMRC உங்களுக்கு நினைவூட்டும்

## பணிபுரியும் பெற்றோர் உரிமைத் தகுதியை நான் எப்படிக் கோருவது?

தொடக்க ஆண்டுகள் உரிமைத் தகுதி (Early Years Entitlement) நிதியானது உங்கள் குழந்தை செல்லும் தொடக்க ஆண்டுகள் வழங்குநருக்கு நேரடியாகச் செலுத்தப்படுகிறது. நீங்கள் அவருடன் ஒரு பெற்றோர்/கவனிப்பாளர்/காப்பாளர் பிரகடனப் படிவத்தை (Parent/Carer/Guardian Declaration Form - PDF) நிறைவு செய்ததும் அவர் உங்கள் சார்பாக அந்த நிதியைக் கோரிப் பெறுவார்.

## உரிமைத் தகுதிகளைக் கூட்டிணைத்தல்:

எல்லா குழந்தைகளும் அவர்களுடைய மூன்றாம் பிறந்தநாளுக்குப் பிந்தைய கல்விக்காலத்திலிருந்து அனைவருக்குமான 15 மணிநேர உரிமைத் தகுதியை அணுக இயலும் (பார்க்க: பக்கம் 6). உங்களிடம் ஒரு சரியான பணிபுரியும் பெற்றோர் உரிமைத் தகுதிக் குறியீடு இருந்தால், உங்கள் குழந்தை அனைவருக்குமான உரிமைத் தகுதியின் கீழ் 15 மணிநேரங்களையும், அத்துடன் பணிபுரியும் பெற்றோர் உரிமைத் தகுதியின் கீழ் 15 மணிநேரங்களையும் அணுக இயலும். இதன் மூலம் அவர்களது ஒட்டுமொத்த உரிமைத் தகுதி அதிகபட்சம் 30 மணிநேரங்களாகிறது.






## கூடுதல் ஆதரவுகள் பெறும் தகுதியுள்ள குடும்பங்களுக்கு 2HELP சிறார் கவனிப்பு நிதி

2 வயதுக் குழந்தைகளுக்கு

- வாரத்திற்கு 15 மணிநேரம் வரை
- ஆண்டுக்கு 38 வாரங்கள் வரை



### நீங்கள் பின்வருவனவற்றைப் பெறுகிறீர்கள் என்றால், உங்கள் 2 வயதுக் குழந்தைக்கு அவரது இரண்டாம் பிறந்தநாளுக்குப் பின்பு அவருக்கு ஒரு 2HELP நிதிபெற்ற சிறார் கவனிப்பு இடத்தை அணுக உங்களால் இயலலாம்:

- வருமான ஆதரவு
- வருமான அடிப்படையிலான வேலை தேடுவோர் படித்தொகை (Job Seekers Allowance)
- வருமான அடிப்படையிலான வேலை மற்றும் ஆதரவு படித்தொகை (Employment and Support Allowance)
- ஓய்வூதிய வரவு (Pension Credit)
- உங்கள் குடும்பம் ஈட்டும் வருமானம் வரிக்குப் பின்பு ஆண்டுக்கு £15,400-ஐவிடக் குறைவாக இருந்தால் அனைவருக்குமான வரவு (Universal Credit)

அல்லது

- குழந்தை ஊராட்சி மன்றத்தால் பார்த்துக்கொள்ளப்படுகிறார்
- குழந்தை சிறப்புக் காப்பு அல்லது ஒரு தத்தெடுப்பு அல்லது குழந்தை ஏற்பாடுகள் ஆணை மூலம் கவனிப்பிலிருந்து வெளியேறியுள்ளார்
- குழந்தைக்கு ஒரு தற்போதைய சிறப்புக் கல்வித் தேவை (Special Educational Need) கூற்று ஒன்று உள்ளது, அல்லது ஒரு கல்வி, சுகாதார மற்றும் கவனிப்புத் திட்டம் உள்ளது
- குழந்தைக்கு உடலூனத்துடன் வாழ்தலுக்கான படித்தொகையை (Disability Living Allowance) பெறத் தகுதி உள்ளது

அல்லது

உங்களுக்குப் 'பொது நிதி பெற வழி இல்லை' (no recourse to public funds) என்று உங்கள் புலம்பெயர்வு நிலை கூறினால், பின்வரும் சூழ்நிலைகளில் நீங்கள் உங்கள் 2 வயதுக் குழந்தையின் இரண்டாம் பிறந்தநாளுக்குப் பிந்தைய கல்விக்காலத்திலிருந்து அவருக்கு ஒரு 2Help நிதிபெற்ற சிறார் கவனிப்பு இடத்தை நீங்கள் அணுக இயலலாம்:

- நீங்கள் இங்கிலாந்தில் வாழ்கிறீர்கள், உங்கள் வருடாந்தர குடும்ப வருமானம் கீழ்க்கண்டவற்றுக்கு உட்பட்டது என்றால்:
  - லண்டனுக்கு வெளியே, ஒரு குழந்தையுடன் உள்ள குடும்பங்களுக்கு £26,500
  - லண்டனுக்கு வெளியே இரு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு £30,600
- சேமிப்பு அல்லது முதலீடுகள் £16,000-க்கு மேல் இல்லை என்றால்

### உரிமைத் தகுதி

2Help நிதிபெற்ற உரிமைத் தகுதி, ஆண்டுக்கு அதிகபட்சம் 570 மணிநேரத்திற்கானது. இது வாரம் 15 மணிநேரத்திற்கு நிகரான அளவில் குறைந்தது 38 வாரங்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் குறைந்த மணிநேரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த உரிமைத் தகுதியை ஓர் ஆண்டில் இன்னும் அதிக வாரங்களுக்கு நீட்டிக்க முடியும். உங்கள் தொடக்க ஆண்டுகள் வழங்குநர் (Early Years Provider) நிதிபெற்ற உரிமைத் தகுதிகளை எப்படி வழங்குகிறார் என்பதை அறிய அவரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## என் குழந்தைகள் எப்போது தகுதி பெறுவார்கள்?

குழந்தைகளுக்கு வழக்கமாக அவர்களுடைய இரண்டாம் பிறந்தநாளுக்குப் பிந்தைய பள்ளிக் கல்விக்காலத்தின் தொடக்கத்தில் ஒரு 2Help நிதிபெற்ற உரிமைத் தகுதி இடம் இருக்கும்.

| இம்மாதங்களுக்கு இடையே பிறந்த குழந்தைகளுக்கு: | நிதிபெற்ற இடங்கள் இதிலிருந்து தொடங்கும்: |
|---|---|
| 1 ஜனவரி – 31 மார்ச் | 2ஆம் பிறந்தநாளை அடுத்து கோடைக் கல்விக்காலத்தின் (Summer Term) (ஏப்ரல் 1 அன்று அல்லது அதன் பின்பு) தொடக்கம் |
| 1 ஏப்ரல் – 31 ஆகஸ்ட் | 2ஆம் பிறந்தநாளை அடுத்து இலையுதிர்காலக் கல்விக்காலத்தின் (Autumn Term) (செப்டம்பர் 1 அன்று அல்லது அதன் பின்பு) தொடக்கம் |
| 1 செப்டம்பர் – 31 டிசம்பர் | 2ஆம் பிறந்தநாளை அடுத்து வசந்தகாலக் கல்விக்காலத்தின் (Spring Term) (ஜனவரி 1 அன்று அல்லது அதன் பின்பு) தொடக்கம் |

## விண்ணப்பிக்கும் முறை:

நீங்கள் இணையவழி இங்கு விண்ணப்பிக்கலாம்:
**www.warwickshire.gov.uk/childcarecosts**
அல்லது QR குறியீட்டின் மூலம் விண்ணப்பிக்கலாம்:

- உங்கள் விண்ணப்பம் தகுதியுள்ளதா என அரசின் தகுதிச் சோதனை அமைப்பை (Eligibility Checking System - ECS) பயன்படுத்திச் சோதிக்கப்படும்
- உங்களுக்குத் தகுதி இருந்தால், உங்கள் EY செலவுச் சான்றுக் குறியீட்டை (Voucher Code) விரிவாகக் குறிப்பிட்டு , நிதி அளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் ஒரு கடிதம் ஒரு நிதிபெற்ற இடத்தை உறுதிப்படுத்தி உங்களுக்கு மின்னஞ்சலில் அல்லது அஞ்சலில் அனுப்பப்படும்
- உங்கள் பகுதியில் நிதிபெற்ற 2Help இடங்களை அளிக்கும் சிறார் கவனிப்பு அமைவுகளின் பட்டியல் ஒன்றும் உங்களுக்கு அனுப்பப்படும்
- நிதியளிப்பை உறுதிப்படுத்தும் கடிதத்தை நீங்கள் தேர்வுசெய்யும் அமைப்பிடம் காட்டி உங்கள் EY செலவுச் சான்றை அதனிடம் தர வேண்டியிருக்கும்
- உங்களுக்குத் தகுதி இருப்பதை உறுதிப்படுத்த இயலாது என்றால், ஆதரவுச் சான்றுகளை அளிக்கும்படி உங்களிடம் கேட்டுக்கொள்ளப்படும்

## 2HELP நிதிபெற்ற உரிமைத் தகுதியை நான் எப்படிக் கோருவது?:

தொடக்க ஆண்டுகள் உரிமைத் தகுதி (Early Years Entitlement) நிதியானது உங்கள் குழந்தை செல்லும் தொடக்க ஆண்டுகள் வழங்குநருக்கு நேரடியாகச் செலுத்தப்படுகிறது. நீங்கள் அவருடன் ஒரு பெற்றோர்/கவனிப்பாளர்/காப்பாளர் பிரகடனப் படிவத்தை (Parent/Carer/Guardian Declaration Form - PDF) நிறைவு செய்ததும் அவர் உங்கள் சார்பாக அந்த நிதியைக் கோரிப் பெறுவார்.

## உரிமைத் தகுதிகளைக் கூட்டிணைத்தல்:

நீங்களும் உங்கள் உறவாளரும் (உங்களுக்கு ஓர் உறவாளர் இருந்தால்) பணிபுரிகிறீர்கள் என்றால், உங்களிடம் ஒரு சரியான பணிபுரியும் பெற்றோர் தகுதிக் குறியீடு (பார்க்க: பக்கம் 1) இருந்தால், உங்களுக்குப் பணிபுரியும் பெற்றோர் உரிமைத் தகுதியின் (Working Parent entitlement) கீழும் கூடுதலாக 15 மணிநேரங்கள் பெறத் தகுதி இருக்கலாம். இதன் மூலம் ஒட்டுமொத்த உரிமைத் தகுதி அதிகபட்சம் 30 மணிநேரங்களாகிறது.

## எல்லா குடும்பங்களுக்கும் அனைவருக்குமான உரிமைத் தகுதி

3-4 வயதுக் குழந்தைகளுக்கு

- வாரத்திற்கு 15 மணிநேரம் வரை
- ஆண்டுக்கு 38 வாரங்கள்

**எல்லா குழந்தைகளும் அவர்களுடைய 3ஆம் பிறந்தநாளுக்குப் பிந்தைய கல்விக்காலத்திலிருந்து கட்டாயப் பள்ளி வயது வரை அல்லது பள்ளி முதலாண்டு வகுப்பு (reception class) வரை, எது முதலில் வருகிறதோ அது வரை, 15 மணிநேர அனைவருக்குமான உரிமைத் தகுதியை அணுகலாம்.**

### உரிமைத் தகுதி:

அனைவருக்குமான நிதிபெற்ற உரிமைத் தகுதி, ஆண்டுக்கு அதிகபட்சம் 570 மணிநேரத்திற்கானது. இது வாரம் 15 மணிநேரத்திற்கு நிகரான அளவில் குறைந்தது 38 வாரங்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் குறைந்த மணிநேரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த உரிமைத் தகுதியை ஓர் ஆண்டில் இன்னும் அதிக வாரங்களுக்கு நீட்டிக்க முடியும். உங்கள் தொடக்க ஆண்டுகள் வழங்குநர் (Early Years Provider) நிதிபெற்ற உரிமைத் தகுதிகளை எப்படி வழங்குகிறார் என்பதை அறிய அவரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

### என் குழந்தை எப்போது தகுதி பெறுவார்?

எல்லா குழந்தைகளும் அவர்களுடைய 3ஆம் பிறந்தநாளுக்குப் பிந்தைய பள்ளிக் கல்விக்காலத்திலிருந்து 15 மணிநேர அனைவருக்குமான உரிமைத் தகுதி உள்ளது. தகுதிபெற விண்ணப்ப நிகழ்முறை எதுவும் இல்லை.

| இம்மாதங்களுக்கு இடையே பிறந்த குழந்தைகளுக்கு: | நிதிபெற்ற இடங்கள் இதிலிருந்து தொடங்கும்: |
|---|---|
| 1 ஜனவரி – 31 மார்ச் | 3ஆம் பிறந்தநாளை அடுத்து கோடைக் கல்விக்காலத்தின் (Summer Term) (ஏப்ரல் 1 அன்று அல்லது அதன் பின்பு) தொடக்கம் |
| 1 ஏப்ரல் – 31 ஆகஸ்ட் | 3ஆம் பிறந்தநாளை அடுத்து இலையுதிர்காலக் கல்விக்காலத்தின் (Autumn Term) (செப்டம்பர் 1 அன்று அல்லது அதன் பின்பு) தொடக்கம் |
| 1 செப்டம்பர் – 31 டிசம்பர் | 3ஆம் பிறந்தநாளை அடுத்து வசந்தகாலக் கல்விக்காலத்தின் (Spring Term) (ஜனவரி 1 அன்று அல்லது அதன் பின்பு) தொடக்கம் |

## விண்ணப்பிக்கும் முறை:

விண்ணப்பிக்கத் தேவையில்லை, குறியீடு எதுவும் தேவைப்படாது.

## அனைவருக்குமான உரிமைத் தகுதியை நான் எப்படிக் கோருவது?

தொடக்க ஆண்டுகள் உரிமைத் தகுதி (Early Years Entitlement) நிதியானது உங்கள் குழந்தை செல்லும் தொடக்க ஆண்டுகள் வழங்குநருக்கு (Early Years Provider) நேரடியாகச் செலுத்தப்படுகிறது. நீங்கள் அவருடன் ஒரு பெற்றோர்/கவனிப்பாளர்/காப்பாளர் பிரகடனப் படிவத்தை (Parent/Carer/Guardian Declaration Form - PDF) நிறைவு செய்ததும் அவர் உங்கள் சார்பாக அந்த நிதியைக் கோரிப் பெறுவார்.

## உரிமைத் தகுதிகளைக் கூட்டிணைத்தல்:

நீங்களும் உங்கள் உறவாளரும் (உங்களுக்கு ஓர் உறவாளர் இருந்தால்) பணிபுரிகிறீர்கள் என்றால், உங்களிடம் ஒரு சரியான பணிபுரியும் பெற்றோர் தகுதிக் குறியீடு (பார்க்க: பக்கம் 1) இருந்தால், பணிபுரியும் பெற்றோர் (Working Parent) உரிமைத் தகுதியின் கீழும் கூடுதலாக 15 மணிநேரங்களை உங்கள் குழந்தை அணுக இயலும். இதன் மூலம் ஒட்டுமொத்த உரிமைத் தகுதி அதிகபட்சம் 30 மணிநேரங்களாகிறது.





Warwickshire County Council

# கூடுதல் உரிமைத் தகுதிகள்

## தொடக்க ஆண்டுகளுக்கான மாணவர் வழங்கீடு

தொடக்க ஆண்டுகளுக்கான மாணவர் வழங்கீடு (Early Years Pupil Premium - EYPP) என்பது தகுதிபெறும் நன்மைத் தொகைகளில் அல்லது வரவுகளில் ஒன்றைப் பெறுகின்ற அல்லது பிற தகுதிபெறும் தேர்வளவைகளில் ஒன்றை நிறைவேற்றும் பெற்றோரின் குழந்தைகளுக்காகத் தொடக்க ஆண்டுகள் வழங்குநர் கோரத்தக்க கூடுதல் நிதியாகும். இது உரிமைத் தகுதிகளை அணுகுகின்ற, அதிகபட்சம் 570 மணிநேரங்கள் வரை தகுதித் தேர்வளவையை நிறைவேற்றுகின்ற குழந்தைகளைக் கொண்ட வழங்குநர்களுக்கு, கோரப்பட்ட நிதிபெற்ற மணிநேரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட இடைவேளைகளில் அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு 30 மணிநேரங்களுக்குத் தகுதி இருக்கும் சூழ்நிலைகளில் EYPP முதல் 15 மணிநேரங்களுக்கு, ஓர் ஆண்டில் மொத்தம் 570 மணிநேரங்களுக்கு வழங்கப்படும்.

தொடக்க ஆண்டுகளுக்குரிய உரிமைத் தகுதிகளைப் பெறும் தகுதியுள்ள குழந்தைகளுக்கான தொடக்கக் கல்வியின் தரத்திற்கு EYPP ஆதரவு அளிக்கிறது. தொடக்க ஆண்டுகள் வழங்குநர்கள் தகுதியுள்ள குழந்தைகளின் கல்வி சார்ந்த முன்னேற்றங்களுக்கு ஆதரவு அளிப்பதற்கும், இத்தகைய நடவடிக்கைகள், ஊழியர் பயிற்சி, வளங்கள் போன்ற பல விஷயங்களுக்கும் இந்தக் கூடுதல் நிதியைப் பயன்படுத்த முடியும்.

ஒரு குழந்தை EYPP-ஐப் பெறத் தகுதியுள்ளவராக இருக்க அவரது பெற்றோர் பின்வரும் நன்மைத் தொகைகளில் அல்லது வரவுகளில் ஒன்றைப் பெறுபவராக இருக்க வேண்டும்:

- வருமான ஆதரவு
- வருமான அடிப்படையிலான வேலை தேடுவோர் படித்தொகை (Job Seekers Allowance)
- வருமானம் தொடர்பான வேலை மற்றும் ஆதரவு படித்தொகை (Employment and Support Allowance)
- புலம்பெயர்வு மற்றும் புகலிடச் சட்டம் (Immigration and Asylum Act) 1999-இன் பகுதி VI-இன் கீழ் ஆதரவு
- அரசு ஓய்வூதிய வரவின் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கூறு
- £7,400-க்கு நிகரான மற்றும் அத்தொகைக்கு மிகாத வருடாந்தர நிகர வீட்டு வருமானத்துடன் கூடிய அனைவருக்குமான வரவு (Universal Credit), மிகச் சமீபத்திய மூன்று அனைவருக்குமான வரவு மதிப்பீட்டுக் காலங்கள் வரை மதிப்பிடப்பட்டது

## அல்லது குழந்தைக்குப் பின்வரும் நிலைகள் இருக்க வேண்டும்:

- ஊராட்சி மன்றத்தால் குறைந்தது ஒரு நாளுக்கு கவனித்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்
- கவனிப்பிலிருந்து தத்தெடுக்கப்பட்டிருக்கிறார்
- சிறப்புக் காப்பின் மூலம் கவனிப்பிலிருந்து வெளியேறியிருக்கிறார்
- ஒரு குழந்தை கவனிப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது

## கோரும் முறை

தொடக்க ஆண்டுகளுக்கான மாணவர் வழங்கீட்டை (Early Years Pupil Premium - EYPP) கோருவதற்கு, நீங்கள் உங்கள் தொடக்க ஆண்டுகள் வழங்குநர் தரும் பெற்றோர்/கவனிப்பாளர்/காப்பாளர் பிரகடனப் படிவத்தை (Parent/Carer/Guardian Declaration Form - PDF) முழுமையாக நிறைவுசெய்ய வேண்டும்.

## உடலூன அணுகல் நிதி

உடலூன அணுகல் நிதி (Disability Access Fund - DAF) தகுதியுள்ள உடலூனமுற்ற குழந்தைகள் தொடக்க ஆண்டுகளுக்கான உரிமைத் தகுதிகளை அணுக ஆதரவு அளிக்கிறது. இது குழந்தைகள் தகுதிபெறும் தேர்வளவைகளுக்குப் பொருந்தும் சூழல்களில் தொடக்க ஆண்டுகள் வழங்குநர்களால் (Early Years Providers) கோரப்பட முடியும்.

தொடக்க ஆண்டுகள் வழங்குநர்கள் தங்கள் அமைவுகளில் நியாயமான திருத்தங்களைச் செய்வதில் மற்றும்/அல்லது திறனை வளர்ப்பதில் – இது தொடர்பான குழந்தைக்காக இருந்தாலும் சரி, அமைவுக்கு வரும் எல்லாக் குழந்தைகளின் நன்மைக்காக என்றாலும் சரி – DAF-ஐப் பயன்படுத்தலாம். தொடக்க ஆண்டுகள் வழங்குநர்கள் DAF-ஐ ஊழியர் பயிற்சி, வளங்கள், ஒரு குழந்தையின் தேவைகளுக்கு ஆதரவு அளிக்க மாற்றங்கள் செய்தல் ஆகியவற்றுக்கும் பயன்படுத்தலாம்.

குழந்தைகள் பின்வரும் தேர்வளவைகளுக்குப் பொருந்தினால் உடலூன அணுகல் நிதி (Disability Access Fund - DAF) பெறத் தகுதியுள்ளவர்களாக இருக்கலாம்:

➢ குழந்தை உடலூனத்துடன் வாழ்தலுக்கான படித்தொகையை (Disability Living Allowance - DLA) பெறுகிறார்

**மற்றும்**

➢ குழந்தை தொடக்க ஆண்டுகள் உரிமைத் தகுதி (Early Years Entitlement) நிதியைப் பெறுகிறார்

## கோரும் முறை

உடலூன அணுகல் நிதி (Disability Access Fund - DAF) கோருவதற்கு, நீங்கள் உங்கள் தொடக்க ஆண்டுகள் வழங்குநர் தரும் பெற்றோர்/கவனிப்பாளர்/காப்பாளர் பிரகடனப் படிவத்தை (Parent/Carer/Guardian Declaration Form - PDF) முழுமையாக நிறைவுசெய்ய வேண்டும்.



# தொடக்க ஆண்டுகளுக்கான உரிமைத் தகுதிகள் - அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்:

## என் குழந்தை ஓர் இடத்தை எங்கு அணுகலாம்?:

உங்கள் குழந்தை பின்வருவது போன்ற ஒரு தொடக்க ஆண்டுகள் வழங்குநரிடம் அவரது தொடக்க ஆண்டுகள் கல்வி இடத்தை அணுகலாம்:

- முழுநாள் கவனிப்புக் காப்பகங்கள்
- மழலைப் பள்ளிகள்
- விளையாட்டுக் குழுக்கள்
- சைல்ட்மைண்டர்கள்
- கவனிப்புக் காப்பகப் பள்ளிகள் மற்றும் வகுப்புகள்

இந்தத் தொடக்க ஆண்டுகள் வழங்குநர்கள் Ofsted-இல் அல்லது ஒரு சைல்ட்மைண்டர் முகமையில் (Childminder Agency) பதிவு பெற்றிருக்க வேண்டும். இவர்கள் உங்கள் குழந்தையின் இடத்திற்கான நிதியை நேரடியாக வார்விக்ஷயர் பிராந்திய சபையிடமிருந்து (Warwickshire County Council) கோரும் பொறுப்புள்ளவர்கள், அதைச் செய்ய அவர்கள் பதிவு பெற்றிருக்க வேண்டும்.

## கட்டணங்கள்:

தொடக்க ஆண்டுகளுக்கான உரிமைத் தகுதிகள் ஒரு வாரத்திற்கு 15 அல்லது 30 மணிநேரங்கள் இலவசமான, உயர்தரமான, நெகிழ்திறனுள்ள தொடக்கக் கல்வி மற்றும் கவனிப்பை வழங்குவதற்கானவை. இந்த 15 அல்லது 30 மணிநேரங்கள் பெற்றோருக்குக் கட்டணமின்றி அணுகத்தக்கவையாக இருக்க வேண்டும். அதாவது, இலவச நேரம் தொடர்பாகப் பெற்றோருக்குக் கட்டாயக் கட்டணங்கள் எவையும் இருக்கக் கூடாது.

சாப்பாடு, பிற நுகர்பொருட்கள், கூடுதல் மணிநேரங்கள் அல்லது கூடுதல் சேவைகளுக்கு ஆகும் செலவுகளை தொடக்க ஆண்டுகளுக்கான உரிமைத் தகுதிகள் உள்ளடக்காது. நுகர்பொருட்கள், சாப்பாடு மற்றும் தின்பண்டங்கள், கூடுதல் நடவடிக்கைகள் மற்றும் கூடுதல் மணிநேரங்களுக்கு வழங்குநர்கள் கட்டணம் விதிக்கலாம், ஆனால் அவை கட்டாயக் கட்டணங்களாகவோ ஓர் இடத்தை அணுகுவதற்கான நிபந்தனையாகவோ இருக்கக் கூடாது.

கட்டணம் விதிக்கத்தக்க கூடுதல் வசதிகளுக்கான விலைகள் வழங்குநர் இணையத்தளங்களில் பிரசுரிக்கப்பட வேண்டும், அல்லது அவர்களுக்கு ஓர் இணையத்தளம் இல்லாவிட்டால் ஊராட்சி மன்ற குடும்பத் தகவல் சேவைகளின் இணையத்தளங்களில் பிரசுரிக்கப்பட வேண்டும். இவை பெற்றோர் வழங்குநரை விவரம் அறிந்து தேர்வுசெய்ய வழிசெய்யும் வகையில் தெளிவாக, சமீபத்திய தகவல்களைக் கொண்டவையாக, எளிதில் அணுகத்தக்கவையாக இருக்க வேண்டும்.

## நான் ஒன்றுக்கு மேற்பட்ட தொடக்க ஆண்டுகள் வழங்குநர்களிடம் தொடக்க ஆண்டுகளுக்கான உரிமைத் தகுதிகளைக் கோரலாமா?:

ஆம், ஒரு நாளில் அதிகபட்சம் 2 தலங்கள் வரை.

## நான் இந்த அமைவுகளை மாற்றலாமா?:

நிதியானது ஆள் எண்ணிக்கை நாள் (Headcount Day) அன்று குழந்தை செல்லும் வழங்குநருக்கு வழக்கமாக முழுக் காலத்திற்கும் வழங்கப்படும். உங்கள் குழந்தை ஆள் எண்ணிக்கை நாளுக்கு முன்பு அல்லது பின்பு வேறு அமைவுக்கு மாறினால், உங்கள் தொடக்க ஆண்டுகள் வழங்குநர் அந்தக் கோரலை மற்ற வழங்குநருடன் பகிர ஒப்புக்கொள்வாரா என்று அறிய நீங்கள் அவருடன் பேச வேண்டும்.



## தொடர்புகள் மற்றும் மேலதிகத் தகவல்கள்:

வார்விக்ஷயரில் உள்ள தொடக்க ஆண்டுகள் வழங்குநர்களைப் பற்றி மேலும் தகவல் அறிய அல்லது உங்கள் பகுதியில் உள்ள ஒரு தொடக்க ஆண்டுகள் வழங்குநருடன் ஓர் இடத்தைக் கண்டறிய உதவி பெற, தயவுசெய்து குடும்பத் தகவல் சேவையை (Family Information Service) 0800 408 1558 என்ற எண்ணில் அல்லது இந்த இணையத்தளத்தில் தொடர்பு கொள்ளுங்கள்:


fis@warwickshire.gov.uk அல்லது www.warwickshire.gov.uk/fis

பணிபுரியும் பெற்றோருக்குரிய உரிமைத் தகுதிகளுக்கான தகுதி மற்றும் இணையவழி விண்ணப்பித்தல் குறித்த கேள்விகளுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள்:
HMRC-இன் வாடிக்கையாளர் ஊடாடல் மையம் (HMRC's Customer Interaction Centre), தொலைபேசி: 0300 123 4097 அல்லது www.beststartinlife.gov.uk

2Help நிதி தொடர்பான கேள்விகளுக்கு தயவுசெய்து தொடக்க ஆண்டுகளுக்கான உரிமைத் தகுதிகள் குழுவை (Early Years Entitlements Team) இங்கு தொடர்பு கொள்ளுங்கள்: 01926 742218, 2help@warwickshire.gov.uk அல்லது www.warwickshire.gov.uk/childcarecosts

பொதுவான நிதி தொடர்பான கேள்விகளுக்கு தயவுசெய்து தொடக்க ஆண்டுகளுக்கான உரிமைத் தகுதிகள் குழுவை (Early Years Entitlements Team) இங்கு தொடர்பு கொள்ளுங்கள்: 01926 742233, eyfunding@warwickshire.gov.uk அல்லது www.warwickshire.gov.uk/childcarecosts

சிறார் கவனிப்புச் செலவுகளுக்கு அரசாங்க உதவி பெறுவது குறித்த எல்லாத் தகவல்களுக்கும் தயவுசெய்து வருகை தாருங்கள்: www.beststartinlife.gov.uk



# குழந்தைகளுடன் பணிபுரிவதை நேசிக்கிறீர்களா?

வளர்ச்சி தரும் பணி வாழ்க்கை

வசதியான வேலைநேரம்

வீட்டில் இருந்தபடி வேலை

சைல்ட்மைண்டராக ஆகுங்கள்

நீங்கள் குழந்தைகளுடன் பணிபுரிவதை நேசிப்பவர் என்றால், உங்களுக்குக் குழந்தை கவனிப்புக்கு ஏற்ற ஒரு வீடு உள்ளது என்றால், உங்களிடம் அது பற்றி அறிய விரும்புகிறோம்



சைல்ட்மைண்டர்கள் இப்போது முற்றிலும் தங்கள் வீடாக இல்லாத இடங்களிலிருந்தும் செயல்படலாம்.

அளிக்கப்படும் ஆதரவு, தொடக்க ஆண்டுகளுக்கான உரிமைத் தகுதி நிதி வழங்க எப்படிப் பதிவு பெறுவது ஆகிய விவரங்கள் உட்பட மேலும் தகவல்கள் இங்கு காணலாம்:

**www.warwickshire.gov.uk/childcare/become-childminder**

WARWICKSHIRE

Warwickshire County Coonck

அக்டோபர் 2025-இல் இற்றைப்படுத்தப்பட்டது

Warwickshire County Council

Early Years Education & Childcare
Funded Entitlements

CHILD FRIENDLY WARWICKSHIRE